**செய்தி வெளியீடு எண் : 131** **நாள்: 19.01.2022**

## செய்தி வெளியீடு

## பருத்தி மற்றும் நூல் விலையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கக் கோரி, மாண்புமிகு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் திரு.பியுஷ் கோயல் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (18-1-2022) மாண்புமிகு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாட்டின் ஜவுளித் துறையின் முக்கியத்துவத்தையும், ஜவுளித் துறையின் செயல்பாட்டை பாதிக்கும் பருத்தி மற்றும் நூல் விலை முன்னெப்போதும் இல்லாத வகையில் உயர்த்தப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி, கடந்த நவம்பர் மாதம் தான் எழுதியிருந்த கடிதத்தை மேற்கோள் காட்டியுள்ளார்.

பருத்தி மற்றும் நூல் விலை ஏற்ற இறக்கம் மற்றும் துணிகள் மற்றும் ஆடைகளின் விலையில் அதன் பாதகமான தாக்கம் ஆகியவற்றின் கடுமையான நிலைமையை தமிழ்நாடு ஆடை மற்றும் பின்னலாடை உற்பத்தியாளர்கள் தெரிவித்து வருவதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனது முந்தைய கடிதத்தில், பருத்தி மற்றும் நூலின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தான் ஏற்கெனவே கோரியிருந்ததாகச் சுட்டிக்காட்டியுள்ளார்:

1. ஊக வணிகத்தைத் தவிர்க்க ஏதுவாக, பருத்திக்கு விதிக்கப்படும் 11% இறக்குமதி வரியை நீக்க வேண்டும்.
2. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மின்னணு ஏலத்தில் (e-auction) பங்குபெற ஏதுவாக, தற்போதுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி குறைந்தபட்சம் 500 பருத்தி பேல்கள் போதுமானது என்ற வகையில் வணிக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை சீரமைக்க வேண்டும்.
3. உச்சபட்ச பருத்தி கொள்முதல் காலங்களான டிசம்பர் முதல் மார்ச் வரை 5% வட்டி மானியத்தை நூற்பாலைகளுக்கு விரிவுபடுத்த வேண்டும்.

இருப்பினும், பருத்தி மற்றும் நூல் விலையைக் கட்டுப்படுத்த ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்று ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் கருதுவதாகத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நூல் விலையைக் கட்டுப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, 21.01.2022 அன்று மாநிலம் முழுவதும் விசைத்தறி, ஆடை மற்றும் பின்னலாடை உற்பத்தியாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்துள்ளதாகவும், தற்போது நிலவும் நூல் விலை உயர்விற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், 17.01.2022 மற்றும் 18.01.2022 ஆகிய இரண்டு நாட்கள் உற்பத்தியை திருப்பூர் ஆடை உற்பத்தியாளர்கள் நிறுத்தி விட்டதையும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

2020 நவம்பர்-டிசம்பர் மாதம் முதல், 2021 நவம்பர்-டிசம்பர் வரை நூல் விலை உயர்வில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றத்தினையும், உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தையில் நிலவிடும் விலையினையும் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நிலைமை கட்டுப்படுத்தப்படாவிட்டால், ஏராளமான விசைத்தறிகள், ஆடை மற்றும் வீட்டு உபயோக ஜவுளி உற்பத்தித் தொழிலகங்கள் இயங்குவது விரைவில் சாத்தியமற்றதாகிவிடும் என்றும், இதன் விளைவாக மாநிலத்தில் பெரிய அளவிலான வேலையின்மை மற்றும் தொழில் துறை அமைதியின்மை ஏற்படும் என்றும் தெரிவித்து, இந்த ஆபத்தான நிலைமையை சீர்மைத்திட இவ்விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்வதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

- - - - - -

**P.R.No: 131** **Date: 19.01.2022**

**Text of the D.O. Letter dated 18-1-2022 of Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to the Hon'ble Union Minister of Textiles.**

I would like to refer to the letter I had written to you in November highlighting the significance of the textile sector for Tamil Nadu and the unprecedented hike in cotton and yarn prices which is affecting the functioning of the textile sector as a whole.

The Apparel and Garment Manufacturers of Tamil Nadu have been representing the grim situation of cotton and yarn price volatility and its adverse impact on the prices of fabrics and garments. In my earlier letter, I had already requested that the following measures be taken up to control the rising price of cotton as well as yarn:

1. Remove 11% Import Duty levied on cotton to avoid further speculation in the coming months.

2. Revamp the commercial terms and conditions prescribed by the CCI for e-auction of cotton by reducing the minimum lot size to 500 bales which is sustainable for the MSMEs. Further, yarn manufacturers may be given priority in the procurement of cotton over traders.
3. Extend 5% interest subvention to the spinning Mills towards procurement of cotton during peak season (December to March)

However, the Textile players are of the view that no concrete steps have been taken by the Union Government to control the Price of cotton and Yarn. Therefore, the Powerloom, Garment & Hosiery Manufacturers of Palladam and Tiruppur have announced a hunger strike on 21.01.2022 across the State demanding the Government to take immediate measures to control the yarn price. Further, the Garment Manufacturers in Tiruppur have stopped the production process for two days on 17.01.2022 and 18.01.2022 as a token of protest against the prevailing Yarn price hike.

The Price hike details of cotton are as follows:

**Cotton Price**

| | |
|---|---|
| November and December 2020 | 29mm – Rs.39,000 /Candy |
| November and December 2021 | 29mm – Rs. 75,000/Candy |
| Price Hike | Rs.36,000/- |
| Percentage | 48% |

**Domestic and International Price Comparison**

| Month | Shankar 6 Rs./Kg | | KAPAS Rs. /Qtl | |
|---|---|---|---|---|
| | 2020-2021 | 2021-2022 | 2020-2021 | 2021-2022 |
| October | 110 | 168 | 5911 | 9030 |
| November | 115 | 185 | 6922 | 8950 |
| December | 117 | 183 | 6034 | 9290 |
| January | 121 | 201 | 6101 | 10062 |

If this situation is not reined in, a large number of Powerlooms, Apparel and Home textile units may soon become unviable resulting in closure and consequent large scale unemployment and industrial unrest in the State. Therefore, I request you to urgently intervene in this matter to resolve this precarious situation that has widespread ramifications.

\- - - - - -

**Issued By: - DIPR, Secretariat, Chennai - 9.**